Registered at the G. P. O as a Newspaper

விசேஷப் பதிப்பு

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி




தபாற் பெட்டி 4 9

: 389

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ மாசி 15 ஆம் நாள் ரம்ழான் 20 (26-2-62) திங்கட்கிழமை இதழ் 16

# காமராஜர், கருணாநிதி கக்கன் வெற்றி

## அண்ணா, ஆதித்தனார் லூர்தம்மாள் தோல்வி

### காரைக்குடி கணேசன்; கம்யூனிஸ்ட் கலியாணசுந்தரம் தெரிவு

சென்னை, பெப். 26

**தமிழ்நாடு முதன் மந்திரி திரு. கே. காமராஜர் பெரும்பான்மையான வாக்குகளால் தமிழ்நாடு சட்டசபைக்கு மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தமிழ் நாட்டின் மராமத்து மந்திரி திரு. பி. கக்கன், மற்றொரு மந்திரி திரு. எஸ். வி. ராமசாமி ஆகியோரும் வெற்றிபெற்றனர். ஸ்தலஸ்தாபன மந்திரி திருமதி லூர்தம்மாள் சைமன் தோல்வியடைந்தார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை காஞ்சிபுரம் தொகுதியில் தோல்வியடைந்தார். திருச்செந்தூர் தொகுதியில் 'நாம் தமிழர்' கட்சித் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தோல்வியடைந்தார்.

சென்னை நகரில் திருவல்லிக்கேணித் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர் திரு. இரா. நெடுஞ்செழியனும் ஆயிரம் விளக்குத் தொகுதியில் தி. மு. க. அபேட்சகர் மதியழகனும் வெற்றிபெற்றனர். தஞ்சாவூரில் தி.மு.க. அபேட்சகர் திரு. மு. கருணாநிதியும் தேனிதொகுதியில் தி. மு. க. அபேட்சகர் நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனும் வெற்றிபெற்றனர்.

காரைக்குடியில் தமிழ் நாடு சுதந்திராக் கட்சித் தலைவர் திரு.சா கணேசனும் திருச்சியில் தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கலியாணசுந்தரமும் வெற்றியீட்டினர்.

### சாத்தூர் தொகுதி

தமிழ்நாடு முதன் மந்திரி திரு. கே. காமராஜர் சாத்தூர் தொகுதியிலிருந்து வெற்றிபெற்றுள்ளார்.

வாக்களிப்பு விபரம்:-

| | |
|---|---|
| **திரு கே காமராஜர்** (காங்கிரஸ) | 46,950 |
| திரு பி ராமசாமி (சுதந்திரா) | 35, 506 |
| திரு ராசாமிரெட்டி | 2,817 |

### காஞ்சிபுரம் தொகுதி

காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட தி மு க தலைவர் திரு சி என் அண்ணாதுரை தோல்வியடைந்தார்.

வாக்களிப்பு விபரம்:-

| | |
|---|---|
| திரு நடேசமுதலியார் (காங்கிரஸ்) | 46,183 |
| திரு சி என் அண்ணாதுரை (தி மு க ) | 36,828 |
| திரு பரசுராமர் (சுயேச்சை) | 1,128 |

### இதர தொகுதிகள்

திருச்செந்தூர் தொகுதியில் தற்போதைய காங்கிரஸ அபேட்சகர் திரு எம் எஸ செல்வராஜன் மீண்டும் வெற்றி பெற்றார். இவருடன் போட்டியிட்ட 'நாம் தமிழர்' கட்சித் தலைவர் திரு சி பா ஆதித்தனார் தோல்வியடைந்தார்.

திருச்சி . தொகுதி-2-ல் போட்டியிட்ட தமிழ் நாடு கம்யூனிஸட் கட்சித் தலைவர் திரு எம் கலியாணசுந்தரம் வெற்றி பெற்றார்.

முதுகளத்தூரில் 'பார்வார்ட்

(2-ம் பக்கம் பார்க்க)

## ராஜ்யங்களில் கட்சிகள் நிலை

புதுடில்லி, பெப். 26

இன்று நண்பகல் வரை வெளியான தேர்தல் முடிவுகளிலிருந்து பல்வேறு ராஜ்யங்களிலும் கட்சிநிலை வருமாறு:-

**ஆந்திரம்**

**வெளிவந்தமுடிவுகள்-81**

| | |
|---|---|
| காங்கிரஸ் | 51 |
| கம்யூனிஸ்ட் | 12 |
| சுதந்திரா | 01 |
| சோஷலிஸ்ட் | 01 |
| மற்றவர்கள் | 09 |

**அஸாம்**

**வெளிவந்தமுடிவுகள்-29**

| | |
|---|---|
| காங்கிரஸ | 22 |
| பிரஜாசோஷலிஸ்ட் | 01 |
| மற்றவர்கள் | 06 |

**பீகார்**

**வெளிவந்த முடிவுகள்-3**

| | |
|---|---|
| காங்கிரஸ் | 2 |
| ஜார்கன்ட் | 1 |

**மைசூர்**

**வெளிவந்த முடிவுகள்-22**

| | |
|---|---|
| காங்கிரஸ் | 17 |
| கம்யூனிஸ்ட் | 01 |
| பிரஜாசோஷலிஸட் | 01 |
| சுதந்திரா | 01 |
| மற்றவர்கள் | 02 |

**பஞ்சாப்**

**வெளிவந்தமுடிவுகள்-87**

| | |
|---|---|
| காங்கிரஸ் | 51 |
| கம்யூனிஸ்ட் | 07 |
| ஜனசங் | 07 |
| சுதந்திரா | 01 |
| சோஷலிஸ்ட் | 02 |
| அகாலிடல் | 12 |
| மற்றவர்கள் | 07 |

**மத்தியபிரதேசம்**

**வெளிவந்த முடிவுகள்-35**

| | |
|---|---|
| காங்கிரஸ் | 21 |
| ஜனசங் | 04 |
| சுதந்திரா | 02 |
| சோஷலிஸட் | 02 |
| இந்துமகாசபை | 02 |
| மற்றவர்கள் | 04 |

**ராஜஸதான்**

இதுவரை ஒரேயொரு முடிவுதான் வெளிவந்திருக்கிறது. இந்த ஒன்றும் காங்கிரஸுக்கே கிடைத்திருக்கிறது.

**மேற்கு வங்காளம்**

**வெளிவந்த முடிவுகள்-36**

| | |
|---|---|
| காங்கிரஸ | 21 |
| கம்யூனிஸட் | 07 |
| பிரஜாசோஷலிஸட் | 01 |
| பார்வார்ட்பிளாக் | 01 |
| மற்றவர்கள் | 16 |

**ஜம்முகாஷ்மீர்**

**வெளிவந்தமுடிவுகள்-37**

| | |
|---|---|
| தேசியமகாநாடு | 36 |
| பிரஜாபரிஷத் | 01 |

## வடசென்னை அந்தோனிப்பிள்ளை தோல்வி

சென்னை, பெப், 26

வடசென்னைத் தொகுதியிலிருந்து காங்கிரஸ் அபேட்சகரான டாக்டர் பி ஸ்ரீ சீனிவாசன் லோகசபைக்கு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்றார். தற்போதைய எம். பி. யான திரு சி அந்தோனிப்பிள்ளை (சோஷலிஸ்ட்) தோல்வியடைந்தார். இத்தொகுதியில் மொத்தம் ஆறு அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

## முடிவு வராத ராஜ்யங்கள்

புதுடில்லி, பெப்.26

உத்கரபிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய ராஜ்யங்களிலிருந்து இது வரை தேர்தல் முடிவுகள் எதுவும் வெளியாகவில்லை.

## காங்கிரஸ் தலைவர் சஞ்சீவரெட்டி வெற்றி

### மைசூர் மாஜி முதன்மந்திரி லோகசபைக்குத் தெரிவு

### ஆந்திரா எதிர்க்கட்சித் தலைவர் வெற்றி

புதுடில்லி, பெப், 26.

அகில இந்திய காங்கிரஸ் அக்கிராசனர் திரு. என். சஞ்சீவரெட்டி ஆந்திர சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பெற்றார். இவருடன் போட்டியிட்ட ஐந்து சுயேட்சை அபேட்சகர்களும் கட்டுப்பணத்தை இழந்தனர். 31,000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார்.

ஆந்திரராஜ்ய முதன் மந்திரி திரு. சஞ்சீவையாவும் வெற்றி பெற்றார்.

தமிழ்நாடு, ஆந்திரம், பஞ்சாப், மேற்குவங்காளம், அஸாம், பீகார் ஆகிய ஆறு ராஜ்யங்களின் முதல் மந்திரிகளும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சென்ற தேர்தலில் சுமார் இருபதினாயிரம் அதிகப்படியான வாக்குகளால் பெரும் வெற்றியீட்டிய பஞ்சாப் முதன் மந்திரி பிரதாப்சிங்கய்ரோன் இம்முறை 34அதிகப்படியான வாக்குகளால் தான் வெற்றியீட்டினார்.

**65,000 அதிக வாக்குகள்**

மைசூர் ராஜ்ய முன்னாள் முதன் மந்திரி திரு. கே. ஹனுமந்தையா பங்களூரிலிருந்து லோகசபைக்குத் தெரிவுசெய்

(2 ம் பக்கம் பார்க்

## தமிழ்நாடு தேர்தல்; கட்சிகள் நிலை

### சட்டசபை மொத்த ஸ்தானங்கள்--205

### முடிவு வெளியான ஸ்தானங்கள் 103

| | | | |
|---|---|---|---|
| காங்கிரஸ்— | 74 | சோஷலிஸ்ட்— | 00 |
| தி. மு. க.— | 22 | த. தேசீய கட்சி— | 00 |
| சுயேச்சை— | 04 | பிரஜா சோஷலிஸ்ட்— | 00 |
| கம்யூனிஸ்ட்— | 01 | முஸ்லிம் லீக்— | 00 |
| சுதந்திரா— | 02 | குடியரசு— | 00 |
| பர்வர்ட் பிளாக் | 01 | ஜனசங்— | 00 |
| நாம் தமிழர்— | 00 | | |

# காமராஜர், கருணாநிதி, கக்கன் வெற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பிளாக்' அபேட்சகர் திரு சகி வர்ணத் தேவர் வெற்றிபெற்ருர்.

சூலூரில் காங்கிரஸ அபேட்சகர் திருமதி குழந்தையம்மாள், மதுரை கிழக்கில் காங்கிரஸ அபேட்சகர் திருமதி லட்சுமிகாந்தம்மாள், கோ பி ச் செட்டிபாளையத்தில் காங்கிரஸ் அபேட்சகர் திரு முத்து வேலப்பகவுண்டர் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

சென்னை மாவட்டத்தில் பேசின்பிரிட்ஜ் தொகுதியில் திரு என் வி நடராஜன் எழும்பூர் தொகுதியில் திரு க அன்பழகன், துறைமுகம் திரு சி பி சிற்றரசு ஆகிய திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் தோல்வியடைந்தனர். எழும்பூர், பேசின்பிரிட்ஜ், புரசைவாக்கம், துறைமுகம் ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்கள், வெற்றி பெற்றனர்.

## தமிழ்நாடு சட்டசபை

**தர்மபுரி**
ஆர் எஸ் வீரப்பசெட்டியார் (சுயே) 24,191
எம் சுப்பிரமணியக்கவுண்டர் (தி மு க) 18,754
எம் கந்தசாமிக்கவுண்டர் (காங்) 14,337
பி ஆர் ராஜகோபாலகவுண்டர் (சுயே) 1,989

**ஓசூர்**
இராமச்சந்திரரெட்டி (காங்) 25,577
சாமாண்ண (சுதந்) 14,101

**ராசிபுரம்**
என் பி செங்கோட்டுவேல் (தி மு க) 26,846
முத்துசாமிகவுண்டர் (காங்) 26,776
அழகப்பஉடையார் (சுயே) 932
சுயேச்சை அபேட்சகர் கட்டுப் பணத்தை இழந்தார்.

**கபிலமலைத் தொகுதி**
வி வேலப்பக்கவுண்டர் (தி மு க) 36,960
பி கே ராமலிங்கக்கவுண்டர் (காங்) 18,610

**தாராமங்களம் தொகுதி**
என் எஸ் சுந்தரராஜன் (காங்) 30,020
நல்லதம்பிக்கவுண்டர் (தி மு க) 26,997

**காட்டுமன்னார் கோயில் தொகுதி**
கிருஷ்ணமூர்த்தி படையாச்சி (தி மு க) 27,706
வாகீசம்பிள்ளை (காங்) 27,599
கோவிந்தசாமி படையாச்சி (சுதந்) 3,474

**திருச்செந்தூர்**
எம் எஸ செல்வராஜன் (காங்) 39,944
கி பா ஆதித்தனர் (நாம் தமிழர்) 27,994
என் கே கசாலிமரைக்கார் (சுயே) 569
பி ஞானராஜ் (சுயே) 361

**நம்பியூர் தொகுதி**
ஏ கே. காளியப்பா கவுண்டர் (காங்) 27,795
பி. ஏ. சாமிநாதன் (தி. மு. க.) 16,275
எஸ். கே. சாமிகவுண்டர் (சுதந்) 5,867
சுதந்திராக்கட்சி அபேட்சகர் கட்டுப்பணத்தை இழந்தார்.

**கடயம் தொகுதி**
ஏ. பி. பாலன் (காங்) 46,160
ஆர். வி. அனந்தகிருஷ்ணன் (கம்யூ) 13,821
ஈ. ஜே. தோமஸ் (சுதந்) 8,154

**போதிநாயனூர் தொகுதி**
ஏ. எஸ். சுப்பராஜ் (காங்) 35,398
ஆர். சுப்பையா (சுயே) 16,759
ஏ. டீ. ராஜன் (சோஷலிஸ்ட் தொழில்) 12668

**தேனி தொகுதி**
எஸ். எஸ். ராஜேந்திரன் (தி. மு. க.) 37,404
என். ஆர். தியாகராஜன் (காங்) 24,610
கே. பி எஸ். ராமசாமி ஆசாரி (சுயே) 419

**கோடைக்கானல் தொகுதி**
எம். அழகிரிசாமி (காங்) 31,062
கே. சோமசுந்தரம் (தி. மு க) 27,671
என். டி. தங்கையாபூபதி (சுயே) 2,879
எஸ். முருகையா (சுயே) 869
இரு சுயேச்சைகளும் கட்டுப் பணத்தை இழந்தனர்.)

**சமயநல்லூர் தொகுதி**
பி. கக்கன் (காங்) 33,091
ஜி. ஆர். முனியாண்டி (கம்யூ) 16596
பி. பி. வடிவேலு (சுதந்) 13671

**கோவில்பட்டித்தொகுதி**
என். வி. வெங்கடகோபால கிருஷ்ணமூர்த்தி (காங்) 22158
ஆர். எஸ். அப்பாசாமி (சுதந்) 18,059
எஸ். அழகர்சாமி (கம்யூ) 15387
எம். பெரியசாமி (தி. மு. க.) 5030
கே. வெங்கட்ராமநாயுடு 543

**மாயூரம் தொகுதி**
ஜி. நாராயணசாமி (காங்) 37,362
பழனிசாமி நாடார் (தி. மு. க) 25,220
ஞானசம்பந்தன் (கம்யூ) 8,847
அங்கப்பன் (சுதந்) 2,373

**மன்னார்க்குடித்தொகுதி**
டி. எஸ் சாமிநாதஉடையார் (காங்) 37,117
பி. நாராயணசாமி (தி மு. க.) 19,021
ஆர். தங்கராசா (கம்யூ) 15,321

**தஞ்சாவூர் தொகுதி**
மு கருணாநிதி (தி மு க) 1900 அதிகப்படியான வாக்குகளால் காங்கிரஸ அபேட்சகர் ஏ வை எஸ பரிசுத்த நாடாரைத் தோற்கடித்தார்.

**காந்தர்வன்கோட்டை**
கே கிருஷ்ணசுவாமி கோபாலர் (காங்) 24,879
கோவிந்தசாமி காலிங்கரர் (தி மு க) 22,061
இராமச்சந்திர தொரை (சுயே) 12,308

**ஹார்பர் தொகுதி**
கே எஸ். ஜி ஹாஜா செரிப் (காங்) 26,330
சி. பி. சிற்றரசு (தி. மு. க) 23,098
இ. கிருஷ்ணமூர்த்தி (சுதந்) 3374
கிருஷ்ணமூர்த்தி கட்டுப் பணத்தை இழந்தார்.

**ஆயிரம் விளக்குத் தொகுதி**
கே. ஏ. மதியழகன் தி. மு. க. 27,984
இந்திராணிசந்திரசேகர் (காங்) 25;609
சம்பந்தன் (த. தே. க) 4772
சி.எம்.பாலுசாமி (சுதந்) 3011

**அருப்புக்கோட்டை தொகுதி**
டி. கடம்பவனசுந்தரம் (காங்) 35595
சவுதி சுந்தரபாரதி (பார்வார்ட் பிளக்) 28583
என் சி ஆறுமுகம் (சுயே) 1084

**இராதாபுரம்**
காங்கிரஸ் அபேட்சகரான சவுந்தரபாண்டியன் வெற்றி பெற்ருர்.

**ராஜபாளையம் தொகுதி**
காங்கிரஸ் அபேட்சகரான ஆர் கிருஷ்ணசாமி வெற்றிபெற்ருர்.

**உப்பிளியபுரம்**
காங்கிரஸ் அபேட்சகர் வி ஏ. முத்தையா வெற்றிபெற்ருர்.

**உளுந்தூர்பேட்டை**
சுதந்திராக்கட்சி அபேட்சகர் திருமதி. மனோன்மணி வெற்றியிட்டினர்.

**நன்னிலம்தொகுதி**
காங்கிரஸ் அபேட்சகர் எம் டி. தியாகராஜபிள்ளை வெற்றி பெற்ருர்

**தாராபுரம் தொகுதி**
திருமதி பார்வதி அர்ஜுனன் (காங்) வெற்றிபெற்ருர்.

**மதுரை கிழக்கு**
காங்கிரஸ் அபேட்சகர் திருமதி லட்சுமிகாந்தன் வெற்றியிட்டினர்.

**சூலூர் தொகுதி**
திருமதி குழந்தையம்மாள் (காங்) வெற்றிபெற்ருர்.

**மைலாப்பூர்**
தி மு க அபேட்சகர் அரங்கண்ணல் வெற்றிபெற்ருர்.

---

## காங்கிரஸ தலைவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யப்பட்டுள்ளார். 65,000 அதிகப்படியான வாக்குகளால் திரு. ஹனுமந்தையா வெற்றி பெற்ருர். இவருடன் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர், சுதந்திரகிகட்சி, ஜனசங் கட்சி ஆகிய அபேட்சகர்கள் தோல்வியடைந்தனர்.

### எதிர்கட்சித் தலைவர் வெற்றி

ஆந்திர சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகருமான திரு. சுந்தரய்யா அவருடன் போட்டியிட்ட காங்கிரஸ அபேட்சகர் திரு. சூரியபிரகாசராவைத் தொற்கடித்து வெற்றியிட்டினர்.

மேற்குவங்காள முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ராய் ஆருயிரம் அதிகப்படியான வாக்குகளாலும், அஸ்ஸாம் முதன் மந்திரி பி. பி. சாலிகா ஏழாயிரம் அதிகப்படியான வாக்குகளாலும் வெற்றி பெற்றனர். மைசூர் ராஜ்யத்தில் ஒரு மந்திரியும், பஞ்சாப் ராஜ்யத்தில் ஒரு மந்திரியும் தோல்வியடைந்தனர்.

அகாலிடல் அபேட்சகர் குர்னம்சிங் வெற்றி பெற்ருர். பஞ்சாபில் இன்று காலைவரைவந்த தேர்தல் முடிவுகளில் அகாலிடல் பத்து ஸ்தானங்களைப் பெற்றது.

## பாதுகாப்புச் சபையின் புதிய மனேஜர்

அநுராதபுரம், திங்கள்
அநுராதபுரம் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பி. எல் கடுவா அநுராதபுர பாதுகாப்புச் சபையின் ஜெனரல் மனேஜராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# லோகசபை தேர்தல் முடிவுகள்

### காங்கிரஸ் – 3

புதுடில்லி பெப் - 26.
டில்லி மேயர் திரு. சாம்நாத் (காங்கிரஸ) லோகசபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருடன் போட்டியிட்ட ஜனசாவ் அபேட்சகரை விட இவர் 28,000 அதிகப்படியானவாக்குகள் பெற்ருர்.

பஞ்சாபில் அமிர்தசரஸ தொகுதியிலிருந்து காங்கிரஸ அபேட்சகரான குர்முக் சிங் லேக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

பங்களூர் தொகுதியிலிருந்து முன்னாள் மைசூர் முதன் மந்திரி திரு ஹனுமந்தையா (காங்கிரஸ) 65,000 அதிகப்படியான வாக்குகளால் லோகசபைக்கு தெரிவு செய்யப்பெற்ருர்.

---


# ப்ரோட்டீன் இன்றி உங்களை நீங்களே எரித்துக் கொள்வானேன்!

ப்ரோட்டீன் என்ற பொருளே உங்கள் தேகம் தினமும் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டு பண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு செல்களை சரிபடுத்துகின்றது. ஆனால் உங்கள் தேகத்தில் ப்ரோட்டீனை சேமித்து வைக்க முடியாது. எனவே தினமும் நீங்கள் போதுமான ப்ரோட்டீன் உட்கொள்ளவேண்டும். இல்லையேல் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அப்படியே நீங்களும் சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.

ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ராண்டஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல் சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும் நோயினின்று குணமடைபவர்களுக்கும், பிராணசக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.

**ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.**







## ப்ராண்ட்ஸ்

எஸ்ஸென்ஸ் ஒப் சிக்கன்

AT-712-2

# மட்டக்களப்பு பகுதியில் மற்ருெரு கஞ்சா வேட்டை

## நீதிமன்றத்தின் முன் கஞ்சா செடிகள் தீக்கிரை

மட்டக்களப்பு, ஞாயிறு

சென்ற தைமாத மத்தியில் சேனங்கடைக்காட்டில், 3000 கஞ்சாச்செடிகளைக் கைப்பற்றிய மட்டக்களப்புப் பொலிசார், இம்மாதம் மற்றுமோர் கஞ்சாவேட்டையில் வெற்றி கண்டுள்ளனர். மட்டக்களப்பின் வடபகுதியில் உள்ள தோணக்கும்பறக்காட்டில் இக் கஞ்சாவேட்டை நடைபெற்றது.

மட்டக்களப்புப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜயசேகரா, இன்ஸ்பெக்டர் திரு கீல், சார்ஜண்ட் திரு. கெண்டி சிங்கோ ஆகிய மூவரின் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கஞ்சாச் செடிகளைக் கைப்பற்றியது.

தோணக்கும்புறக் காட்டில் ஆறுநாட்கள் அலைந்து திரிந்த இப்பொலிஸ் கோஷ்டியினர் சுமார் ஏழு ஏக்கா நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான கஞ்சாச்செடிகளைக் கண்டுபிடித்தனர். அவற்றுள் சுமார் 1500 கஞ்சாச் செடிகளைப் பிடுங்கிக்கொண்டு மற்றைய செடிகளைத் தீக்கிரையாக்கினர்.

பிடுங்கப்பட்ட கஞ்சாச்செடிகள் மட்டக்களப்பு நீதிஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பட்டன. மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். தம்பித்துரை அவைகளைத் தீயிலிடும்படி உத்தரவிட்டார். நீதிஸ்தலத்தின் அருகாமையிலேயே பொலிஸ் பாதுகாப்பில் அக்கஞ்சாச் செடிகள் தீக்கிரையாக்கப்பட்டன.

## காத்தான்குடி உபதேர்தல்

மட்டக்களப்பு, ஞாயிறு

காத்தான்குடி இரண்டாம் வட்டார உபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் மார்ச் மாதம் மூன்ரும் திகதி ஏற்றுக் கொள்ளப்படுமென தேர்தல் அதிகாரி திரு. எஸ். முருகேசு அறிவித்துள்ளார். சமீபத்தில் நடைபெற்ற பட்டினசபைத் தேர்தலில், இரண்டாம் வட்டார அங்கத்தவராகப்போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட ஜனப். ஏ. அஹமது லெப்பை, தமது அங்கத்தவர் பதவியை இராஜினுமாச்செய்துள்ளதால், இவ்வுபதேர்தல் நடத்தப்படுகிறது.

## மாணவர் சங்கம்

காரைநகர், சனி

காரைநகர் பாலாவோடை தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர் சங்க ஆரம்பக்கூட்டம் நேற்றைய தினம் ஆசிரியர் எஸ். கந்தையா தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் வே. காசிநாதன் "மாணவர் சங்கமும் அதன் நோக்கமும்" என்னும் விஷயம் பற்றி பேசினர்.

# ஓமந்தை மகாவித்தியாலயத்துக்கு எம். பி. பாராட்டு

முள்ளியவளை, திங்கள்

"கடந்த வருடத்தில் இம் மாவட்டத்தில் 4 பாடசாலைகளுக்குக் கட்டடத்துக்கெனப் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனல் இக்கட்டடம் தான் முடிவடைந்து, திறப்புவிழாவும் நடைபெறுகின்றது இதனைக் கட்டிமுடித்த பெற்ருர் ஆசிரியர் சங்கமும், அதன் தலைவர் திரு சி. கந்தையாவும் பாராட்டுக்குரியவர்கள். சேவையே குறிக்கோளாகக் கொண்டவர் அவர்."

ஓமந்தை மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்புவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு வித்தியாலய அதிபரைப் பாராட்டினர்.

தொடர்ந்து அவர் பேசும் போது குறிப்பிட்டதாவது:

"தூரத்திலிருந்து வந்து படிக்கும் மாணவர் தங்குவதற்கென ஒரு விடுதி அமைப்பதற்குக் கல்லூரி அதிபரும் பிறரும் முயற்சி செய்வதாக அறிகிறேன். அரசாங்கம் பணம் கொடுக்காத போதிலும் பொது மக்களிடமிருந்தும் ப. நோ. கூ. சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களிடமிருந்தும் பெறும் நன்கொடைகளின் மூலமாக இதனைச் செய்து முடிப்பதற்கு அதிபர் முயற்சி செய்கிருர். இத்தொகுதியின் கல்விநிலையங்களுக்குள்ளே ஓமந்தை மகாவித்தியாலயம் முன்மாதிரியாகத் திகழ்கின்றது."

வவனியா அரசாங்க அதிபர் திரு. என். பி. எம். செனிவிரத்தின, நாடாவைக் கத்தரித்ததும் கல்வியதிகாரி திருமதி ஆர். நவரத்தினம் குத்துவிளக்கேற்றியும் கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. சு. வேகாவனவேல், திரு. க. நல்லதம்பி உடையார், கிழக்குமூலை வடக்கு கி. ச. தலைவர் திரு. சி. உ. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

பெற்ருர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு.சி. சின்னையா ஆசிரியர் நன்றி கூறினர்.

## பாடசாலை பொறுப்பேற்கப் பட்டது

ஹட்டன், திங்கள்

மாணவர்களிடமிருந்து சம்பளம் பெறுவதாக ஆசிரியர்களுககு ஒழுங்காக சம்பளம் வழங்காமலிருப்பதாகவும் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஹட்டனிலுள்ள சென். ஜோன்பொஸ்கோ கல்லூரியின் நிர்வாகத்தை வித்தியாபதியின் கீழ் கொண்டுவர வேண்டுமென கல்வி மந்திரி அறிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் சுமார் 1,000மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

## அதிகப்படியான வாக்குகள்!

சென்னை, பெப் 26

திராவிட முன்னேற்ற க்கழகத் தலைவர் திரு. சி. என், அண்ணுத்துரை காஞ்சிபுரம் தொகுதியில் 1957-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பதினாயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்ருர். அப்பொழுது அவருடன் நான்குபேர் போட்டியிட்டனர். இம்முறைத்தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் நடேசமுதலியார் திரு. அண்ணுதுரையை விட ஒன்பதினுயிரம் வாக்குகளால் வெற்றிபெற்ருர்.

## பெற்ருேர் ஆசிரிய சங்கம்

ஓமந்தை ஞாயிறு

மரைக் காரம்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்ருேர் ஆசிரிய சங்கக் கூட்டம் கடந்த வாரம் தலைமையாசிரியர் திரு. கா. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

புகை பிடிக்கும் அன்பர்களுக்கோர் நற்செய்தி!

மெருதுவான புகையிலையினுல் மணமும் குணமும் ஒருங்கே அமையத் தயாரிக்கப்பட்டது

ஜலன்ட் மாலினி சுருட்டு

கைக்கடக்கமான பையுறைகளில் குளிர், வெப்பம், தூசி உட்புகாவண்ணம் அடைக்கப்பட்டு முதன்முதலாக வெளிவந்துள்ளது.

ஜலன்ட் மாலினி சுருட்டு ஒன்றே!

★ சிக்கனமானது ★ உற்சாகமூட்டத்தக்கது ★ எல்லோராலும் போற்றப்படுவது

ஜலன்ட் மாலினி சுருட்டு

அருகாமையிலுள்ள கடையில் ஜலன்ட் மாலினி சுருட்டு என்று கேட்டு வாங்குங்கள்

— இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும் —




இப்பொழுது திரையிடப்படுகிறது!

பிளாஸா (வெள்ளவத்தை) கெபிட்டல் (கொழும்பு)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) சகாரா (சிலாபம்)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனு நடித்த




2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 தியேட்டர்களில்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாசமலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜிகணேசன் பத்மினி நடித்த

தூக்கு தூக்கி

# விஷமிகள் கிளர்ச்சியை தூண்டிவிடுகின்றனர்
## அயூப்கான் குற்றச்சாட்டு

ராவல்பின்டி, பெப். 26

"நாட்டிற்கெதிரான விஷமிகள் நாட்டில் கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிறார்கள். இவர்கள் மாணவர்களை தங்கள் விஷமச் செயல்களுக்கு உபயோகித்துக் கொள்கிறார்கள்" என்று பாக்கிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் நேற்று தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரின் அழைப்பையேற்று காஷ்மீர் பிரச்சினை பற்றிப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இந்தியாவுக்குச் செல்வீர்களா? என்று ஒரு நிருபர் கேட்டதற்கு "காஷ்மீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியுமென்ற அறிகுறி தெளிவாகத் தெரியுமானால் பேச்சுவார்த்தைநடத்துவதற்கு இந்தியாவுக்குப் போவேன்" என்று ஜனாதிபதி அயூப்கான் பதிலளித்தார்.

## ஜன சமுகநிலைய புதிய நிர்வாகிகள்

பருத்தித்துறை, ஞாயிறு

செம்பியன்பற்றுத் தரவை ஜனசமுக நிலையம் ஒழுங்காக நடைபெருததால் ஓர் விசேட கூட்டத்தைக்கிராமச்சங்கத் தலைவர் கூட்டினர். அக்கூட்டத்தில் திருவாளர்கள் கா. ஆறுமுகம், நா. சுப்பிரமணியம், செ. இரத்தினசிங்கம், ஆகியோரை முறையே தலைவர், காரியதரிசி, தனதிகாரியாகியோராகக் கொண்ட புதிய நிர்வாக சபை ஒன்றுதெரிவுசெய்யப்பட்டது.

## கிணற்றுள் விழுந்து மரணம்

பருத்தித்துறை, ஞாயிறு

புலோலியைச்சேர்ந்த 58 வயதுடையகணபதிப்பிள்ளை மகள் சின்னப்பிள்ளை என்பவர் புட்டைப்பிள்ளையார் கோவில் கிணற்றுள் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

சகோதரியின் மகனை கணபதிப்பிள்ளை என்பவர் சிலதினங்களின் முன் அதே கிணற்றுள் விழுந்து மரணமடைந்தார். அவரின் பிரிவினல் அதிக வேதனை அடைந்த இவர் சில நாட்களாக அக்கிணற்றடிக்கு அடிக்கடி சென்றுவரக்காணப்பட்டாராம்.

மரண விசாரணை அதிகாரி திரு.க.தம்பிப்பிள்ளை தற்கொலை மரணம் என தீர்ப்பளித்தார்.

## வாசிகசாலை திறப்பு விழா

பருத்தித்துறை, ஞாயிறு

நேற்று மாலை ஓடக்கரையில் மக்கள் படிப்பகம் என்னும் வாசிகசாலையொன்றை சமத்தான நீதிபதி திரு. கே. இராதினசிங்கம் திறந்து வைத்தார். பட்டினசபைத்தலைவர் திரு. ந. நடராசா இவ்விழாவிற்குத்தலைமை வகித்தார். திருவாளர்கள் இ. அருணசலம், நா. பாலசுந்தரம், இ. பஞ்சலிங்கம், சு. சந்திரசேகரம் ஆகியோர் பேச்சாளராகக் கலந்து கொண்டனர்.

## ச. ச. நிலையக் கூட்டம்

முள்ளியவளை, திங்கள்

இரணைப்பாலை பத்திமா சன சமுக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. இ. ப. பத்திநாதர் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. த. பத்திநாதர், உபதலைவர் திரு. க. மிக்கேற்பிள்ளை, காரியதரிசி திரு. ம. செபமாலை, உபகாரியதரிசி திரு. ஆ. சுவாமிநாதர், தனதிகாரி திரு சு. செபமாலை முத்து.

நான்கு பேர் கொண்ட ஆலோசனைக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## சீன - இந்திய எல்லைப் பிரச்னை
### நேரு கருத்து

புதுடில்லி, பெப். 26

"இந்திய-சீன எல்லைப் பிரச்னைக்கு சமரசத் தீர்வு காண்பதற்கு சாத்தியமான சிறு சந்தர்ப்பத்தையும் தவறவிடமாட்டேன்" பாரதப் பிரதமர் நேரு தெரிவித்தார்.

சீன-இந்திய எல்லைப் பிரச்னைபற்றி சீனப் பிரதமர் சூ என் லாயை ரங்கூனில் சந்தித்துப் பேசுவதற்கு ஒப்புக் கொள்ளும்படி பர்மாப் பிரதமர் யு. நூ. பாரதப் பிரதமருக்கு யோசனை கூறியதாக அமெரிக்க பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்திபற்றி நிருபர்கள் பாரதப் பிரதமரிடம் கேட்டதற்கு யு. நூ. அப்படியான யோசனையெதையும் தன்னிடம் தெரிவிக்கவில்லையென்றார்.

# இரத்ததானம் பெறுவதற்கு இரவில் அலைந்த கணவன்
## மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இரத்த வங்கி இல்லாததின் விளைவு

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு பிரதம ஆஸ்பத்திரியில் ஓர் இரத்த வங்கி இல்லாததால், பெரும்பாலான நோயாளிகள் அடிக்கடி பெரும் கஷ்டப்படவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. நோயாளிகள் உயிரோடு போராடும் ஆபத்தான நேரத்திலும், சத்திர சிகிச்சையின்போதிலும்இரத்த தானத்திற்காக பொதுமக்களை நாடவேண்டிய நிலை அடிக்கடி இங்கு ஏற்பட்டுவருகிறது,

பிரசவவேதனையால் துடித்துக்கொண்டிருந்த ஒரு பெண்மணிக்கு சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நிலை சென்ற 21-ம் திகதி புதன்கிழமை இரவு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஏற்பட்டது ஆனல் அவருக்கு இரத்தம் செலுத்தவேண்டி நேர்ந்தது. ஆஸ்பத்திரியில் இரத்தம் இல்லாததால், இரத்ததானம் செய்யக்கூடியவர்கள் யாரையாவது அழைத்து வரும்படி அப்பெண்மணியின் கணவனை டாக்டர்கள் கேட்டார்கள். பிரசவவேதனையால் துடிக்கும் தன் மனைவியைக் காப்பாற்ற, இராநேரத்தில் இரத்தம்தேடவேண்டிய நிலை அப்பெண்ணின் கணவருக்கு ஏற்பட்டது. கணவனின் பெருமுயற்சியால் சிலமணி நேரங்களுக்குள்ளாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துவரப்பட்ட ஒரு சிலரால் இரத்ததானம் செய்யப்பட்டு, சத்திரசிகிச்சை நடைபெற்றதால் பெண்மணியின் உயிர் காப்பாற்றப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றும்கூட இதுவரை மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஓர் இரத்தவங்கியை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## கி. மு. சங்க பாடசாலைகள்
### அரசாங்கம் பொறுப்பேற்றது

ஒமந்தை ஞாயிறு

1959ம் ஆண்டு மருதோடை கோதண்டர் நொச்சிக்குளம் முகம்தாங்குளம் குடியேற்றத் திட்டத்தில் அவ்வப்பகுதியிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களால் கட்டப்பட்டு நடத்திவந்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்றுள்ளது.

இப்பாடசாலைகளில் படிப்பித்த ஆசிரியர்கள் மூன்று ஆண்டுகளாக எதுவித வேதனமும் பெருமல் கடமையாற்றினர்.

கர்னூல், பெப். 26

ஆந்திர சட்டசபை சபாநாயகராகப் பதவிவகித்த திரு. காளேஸ்வர ராவ் இன்று அதிகாலை மாரடைப்பால் மரணமானர்.

82 வயதான திரு காளேஸ்வர ராவ் ஒரு எழுத்தாளருமாவார்.


# யாழ்ப்பாண மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!



★ பலவிதமான புதிய டிசைன்களிலும்

★ அழகான கலர்களிலும்



ஆண்களுக்கும் பெண்களுக்கும்

தேவையான சகலவிதமான



பாதரட்சைகளும், ஜோன் வைற், டி. ஐ., "கிபோ" (செக்கோஸ்லேவியா) சப்பாத்து வகைகளுப் மற்றும் "சூட்கேஸ்"



தோல் பிளாஸ்டிக் ஹான்ட் பாகஸ்

முதலியன மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# கோல் ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: க. மூ. சின்னத்தம்பி

தலைமை அகம்: 103, பிரதான வீதி, காலி.

45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: 10, 12, பிரதான வீதி, காலி.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாத 26ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.